# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| அரியலூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் நிகழும் துர்முகி வருடம் 29.05.2020ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு தனிஅலுவலர் அவகளின் தலைமையில் நடைபெறும். அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது | | | |
| 29.05.2020 | 297 | <u>பொருள் எண். 01</u><br>ஆணையர் அவர்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | |
| 29.05.2020 | 298 | <u>பொருள் எண். 02</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் மூன்று மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குரும்பன்சாவடி குடிநீர் விநியோக அமைப்புகளில் பொருத்தப்பட்டுள்ள spot chlorination injector and actuator என்ற கோட்பாட்டின்படி Dosage மோட்டார் பம்புகள், ஸ்டார்ட்டர்கள் மற்றும் Spring actuated flow sensor and dry run sensor storage tank braided hose and tubing connector அமைப்புகளுக்கு தேவையான சோடியம் குளோரைட் திரவத்தினை கொள்முதல் செய்திட ரூ.9.80 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் பணி என்பதாலும் பொது மக்கள் நலன் சாந்த பணி என்பதாலும் பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 29.05.2020 | 299 | <u>பொருள் எண். 03</u><br>தலைமை செயலாளர், சென்னை அவர்களின் கடிதம் எண்.01.CS/2020. நாள்.15.03.2020ன்படி கொரோனா வைரஸ் தொற்று பரவி வருவதை தடுப்பதற்கு அனைத்து துறைகள் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவாகவும், விளக்கமாகவும் அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. அதில், நகராட்சி நிர்வாகம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.<br>1. நகராட்சி பகுதிகளில் அனைத்து தெருக்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் முழுவதும் கிருமி நாசினிகள் கொண்டு தெளிக்கப்பட வேண்டும்.<br>2. அனைத்து பொதுமக்களும் கிருமி அழிக்கும் திரவம் கொண்டு கைகளை சுத்தம் செய்யப்பட வேண்டும் என பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்ய வேண்டும்.<br>3. பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், பெரிய அங்காடிகள், திரையரங்கம் மற்றும் சந்தை பகுதிகள் போன்ற இடங்களில் கிருமி நாசினிகள் தெளிக்கப்படவேண்டும்.<br>4. பொது நிறுவனங்கள், பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், வாகனங்கள் நிறுத்தும் இடங்கள் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் ஆகிய இடங்களில் 1% ஹைப்போ குளோரைடு மற்றும் லைசால் கொண்டு சுத்தம் செய்யப்பட வேண்டும். | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 5. தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் தன்சுத்தம் பேணுதல் தொடர்பாக விழிப்புணர்வு அளிக்கப்பட வேண்டும்.<br>6. கோவில்கள், மசூதிகள் மற்றும் தேவாலயங்கள் ஆகிய முக்கிய ஆன்மீக தளங்களில் தொடர்ச்சியாக கிருமி நாசினிகள் தெளிப்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.<br>அண்மைக்காலமாக இந்த கொரோனா வைரஸ் நோய் தொற்றின் தாக்கம் உலகின் பல்வேறு நாடுகளில் கடுமையான தொற்று ஏற்பட்டு வெகு வேகமாக மனிதர்களிடையே பரவி மரணத்தை ஏற்படத்தி அதன் வாயிலாக மனித சமுதாயத்திற்கு மிகப்பெரிய பாதிப்பையும், அச்சுறுத்தலையும் ஏற்படுத்தி இருக்கிறது. தற்போது இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் இந்த நோயின் தாக்கம் பரவி வருகிறது. இதனை கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சியத்தலைவர், அரியலூர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரையை பின்பற்றி முதல்கட்டமாக கிருமி நாசினி மற்றும் மருந்து தெளிப்பான்கள், பணியாளர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள், இயந்திர கருவிகள் ஆகியவை நகராட்சி விதி 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.987667/-னை ஸ்ரீசுதர்சன் டிரேடர்ஸ், பெரம்பலூர் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் பதிவு செய்யலாம். | |
| 29.05.2020 | 300 | <u>பொருள் எண். 04</u><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வாரசந்தை பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தின் அணுகு சாலை அமைய உள்ளதற்கு இடையூறாக உள்ள நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகக்கட்டிடத்தின் ஒருபகுதியை இடித்து அப்புறப்படுத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அலுவலப்பணி என்பதால் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 29.05.2020 | 301 | <u>பொருள் எண். 05</u><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 மின்நகர் பகுதிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து சுமார் 600மீ நீளத்திற்கு புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>குடிநீர் பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் மேற்காணும் பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 29.05.2020 | 302 | <u>பொருள் எண். 06</u><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் அமைந்துள்ள இடத்தில் அரியலூர் நகராட்சிக்கு, புதிய நகராட்சி அலுவலகம் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளதால் புதிய நகராட்சி கட்டிட முன்புறம் உள்ள மொத்தம் 13 கடைகளில் கடை எண்.07 முதல் 12 வரை உள்ள கடைகள் நகராட்சி அலுவலகத்திற்கு முன்புறம் உள்ளதால், அலுவலக முகப்பு பகுதி அமைப்பதில் 7 கடைகளும் இடையூறாக உள்ளது. எனவே இந்த கடைகளை இடிப்பதற்கு சம்மந்தப்பட்ட குத்தகைதாரர்களுக்கு தொடர்ச்சியாக நகராட்சியால் அறிவிப்பு செய்யப்பட்டு வந்த நிலையில் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | குத்தகைதாரர்கள் தாங்களாகவே முன்வந்து கடையை காலிசெய்து கொள்வதற்கு மேலும் இசைவளித்துள்ளனர்.<br>தற்போது கொரோனா தொற்று நோயினால் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால், தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதை தனி அலுவலர் கருத்தில் கொண்டு பேருந்து நிலைய மேற்பகுதியில் மாவட்ட மைய நூலக கட்டிடப்பகுதியின் பின்புறம் காலியாக உள்ள இடத்தில் தாங்கள் சொந்த செலவில் தற்காலிக இரும்பினால் கொட்டைகையை அமைத்துக்கொள்வதற்கும், ஏற்கனவே சந்தை பகுதியில் கெட்டி கட்டிடத்திற்கு செலுத்தி வந்த அதே வாடகை தொகையினை செலுத்துவதாக தெரிவித்து சமர்ப்பித்துள்ள மனு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>நிர்வாக நலன் கருதி புதிய நகராட்சி அலுவலகத்தினை திறந்து பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாதவாறு பேருந்து நிலைய மேற்பகுதியில் மாவட்ட மையநூலக கட்டிடத்தின் பின்பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள இடத்தில் கடை எண்.07 முதல் 12 வரை உள்ள குத்தகைதாரர்கள் தங்கள் சொந்த செலவில் தற்காலிக இரும்பு கொட்டகை அமைத்துக்கொள்ளவும், பழைய வாடகை தொகையை ஏலநிபந்தனைகளுக்கு உட்பட்டு செலுத்த மன்றம் அனுமதிக்கலாம். | |
| 29.05.2020 | 303 | <u>பொருள் எண். 07</u><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான அரசினர் கலைக்கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் படிகட்டுகள் பழுதடைந்துள்ளதால், மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியினை சுத்தம் செய்வதில் சிரமம் ஏற்படுவதால், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியின் படிக்கட்டுகளை இரும்பிலான படிகட்டுகளாக புதிதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>குடிநீர் பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் மேற்காணும் பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 29.05.2020 | 304 | <u>பொருள் எண். 08</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் பிரதான குழாய்கள் மூலம் வழியோர கிராமங்களான சாத்தமங்களம், கீழப்பழுவூர், வாரணவாசி தவுத்தாய்குளம் மற்றும் அம்மாகுளம் கிராமங்களுக்கு கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீர் எத்தனை லிட்டர் என்று கண்டறிவதற்கான water meter பொருத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>குடிநீர் பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் மேற்காணும் பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 29.05.2020 | 305 | <u>பொருள் எண். 09</u><br>அரியலூர் நகராட்சிக்கு ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் புதிய அலுவலகக்கட்டிடம் கட்டும் பணிகள் யாவும் முடிவடைந்து அலுவலகப்பயன்பாட்டிற்கு தயார் நிலையில் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளதால், புதிய அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளுக்கும், வரி வசூல் மையம், ஆணையர், பொறியாளர், மேலாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் அறைக்கு என தனித்தனியாக தொலைபேசி இணைப்பு மற்றும் கணினி பயன்பாட்டிற்காக இணைவழி கேபிள்கள் புதியதாக அமைப்பதற்கு தாயரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அலுவலகப்பணி என்பதால் மேற்காணும் பணியினை பொது நிதியில் மேற்கொள்ளலாம். | |

ஆணையர்,
அரியலூர் நகராட்சி.